செ.வெ.எண்: 11 நாள்: 03.10.2019

**மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் - மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சி பணிகள் கண்காணிப்பு அலுவலர் திருமதி. பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அனைத்துறைகள் வளர்ச்சி பணிகள் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (03.10.2019) நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சி பணிகள் கண்காணிப்பு அலுவலர் திருமதி.பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் அனைத் துறைகள் வளர்ச்சி பணிகள் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (03.10.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்வாய்வின் போது வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, சுகாதாரத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம், மாவட்ட வழங்கல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நகராட்சி, ஓசூர் மாநகராட்சி, பள்ளி கல்வித்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட துறைகளில் பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்தும் குடிநீர் பணிகள் மேற்கொண்டுவருவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சி பணிகள் கண்காணிப்பு அலுவலர் திருமதி.பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கும்பொழுது:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் டெங்கு தடுப்பு பணிகள், குடிமராமத்து பணிகள், குடிநீர் திட்ட பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து நேரடி கள ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டத்தின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 333 ஊராட்சிகள், 6 பேரூராட்சிகள், ஓசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி உள்ளிட்ட இடங்களில் பொது மக்களுக்கு தடையில்லா குடிநீர் வழங்குவது குறித்து எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின் போது எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை குறித்து இன்று ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

வடகிழக்கு பருவமழையின் போது பாதிப்பு ஏற்பட கூடிய இடங்கள் என 35 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. மழை காலங்களில் அதிக மழை பெய்தால் வெள்ளம் ஏற்படும்பொழுது பாதிப்புக்குள்ளாகும் நபர்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து செல்ல ஆண்கள் மற்றும் பெண்கள் என குழுக்கள் அமைத்து அவருடைய செல்போன் எண்கள் பெறப்பட்டுள்ளது. காவலத்துறை, தீயணைப்புத்துறை, வருவாய்த்துறை அனைத்து துறைகளும் மீட்புபணிகளில் ஈடுப்படுத்தபடுவார்கள். மழை காலங்களில் காய்ச்சாலால் பாதிக்கப்படுபவர்களுக்கு தீவிர காய்ச்சால் பிரிவு, சாதாரண காய்ச்சல்

பிரிவு ஏற்படுத்தப்படும். இந்த ஆண்டு ஜனவரி 2019 முதல் செப்டம்பர் 2019 வரை டெங்கு காய்ச்சலால் 107 நபர்கள் சிகிச்சை பெற்றனர். தற்போது காய்ச்சால் பாதிக்கப்பட்டவர்கள் வெளிநோயாளி வருகை சற்று உயர்ந்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 100 ஏரிகள், 425 குளம், குட்டைகள் தூர்வார ஆணை வழங்கி 70 சதவீதம் பணிகள் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள ஏரிகளில் தூர் வாருவதற்கு மாவட்ட நிர்வாகம் மூலம் கருத்துரு தயார் செய்து இந்த ஆண்டில் அனைத்து ஏரி, குளம் நீர்நிலைகளில் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும். பருவநிலை மாற்றம் மற்றும் மழை காலங்களில் பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க மருத்துவப்பணியாளர்கள், ஊரக வளர்ச்சி துறை மற்றும் பள்ளி கல்வித்துறை, சமூக நலத்துறை என அனைத்து துறையினரும் டெங்கு தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். டெங்கு கொசுக்களை ஒழிக்கவும், டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்கவும் பள்ளி மாணவ மாணவிகள் தூய்மை தூதுவர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. தமிழக முதல்வரின் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்து துறை அலுவலர்களுக்கும் பிரித்து வழங்கி அந்த மனுக்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சி பணிகள் கண்காணிப்பு அலுவலர் திருமதி.பீலா ராஜேஷ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். மருத்துவமனையில் குடிநீர், கழிப்பறை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பிறகு கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவிகளிடையே தூய்மை பணிகள் குறித்து கலந்துரையாடி என் வீட்டிற்கும், தெருவுக்கும், பள்ளிக்கும் நான் ஒரு தூய்மைத் தூதுவர் என்கிற அடையாள அட்டையை மாணவிகளுக்கு வழங்கினார்.

மேலும் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கம்மம்பள்ளி ஊராட்சியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.5/- இலட்சம் மதிப்பில் குட்டையரெட்டி ஏரி நீர்வரத்து கால்வாய், நீர் வெளியேற்று கால்வாய், கரைகள் பலப்படுத்தும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வு கூட்டத்தின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பண்டி கங்காதர் இ.க.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.சாந்தி, மாவட்ட வன அலுவலர் திரு.தீபக் பில்கி. இ.வ.ப., மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமமூர்த்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஹரிஹரன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) டாக்டர் பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர் பிரியாராஜ், செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி திரு.ஆறுமுகம், கோட்டாட்சியர்கள் திருமதி.தெய்வநாயகி, திரு.குமரேசன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள், மாநகராட்சி, பேரூராட்சி அலுவலர்கள், கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.**